**S.T.C No. 131/2024**

**Dated: 17.06.2025**

**PW: 1 ஆவுடைத்தாய்**

**(Witness has been administered Oath U/s 3 of the Oaths Act 1969)**

**குறுக்கு விசாரணை :**

1. உங்களது கணவர் இராணுவத்தில் என்ன பணியில் இருந்தார் என்ற விபரம் **பு.சா.ஆ.8** ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. **பு.சா.ஆ.9** வுடன் இந்திய சாட்சி சட்டம் பிரிவு 65 பி சான்றிதழ் இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். மாதம் ஒய்வூதியமாக எவ்வளவு வருகிறது என்ற விபரம் **பு.சாஆ.9** ல் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்து 6 வருடங்கள் தான் ஆகிறது. குடும்ப ஒய்வூதியமானது 7 வருடங்கள் கழித்து தான் வழங்கப்படும். ஆனால் என் கணவர் இறந்தற்க்காக ஒய்வூதியமாக **ரூ. 21,488/-** வழங்கப்பட்டுள்ளது. இதற்கு Dearness Allowance ம் உண்டு.

2. மேற்படி DA நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அந்த விபரம் என்னுடைய வங்கி கணக்கில் இருக்கும். ஒய்வூதியம் எந்த வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது என்றால் கோவில்பட்டி மெயின் கிளை பாரத ஸ்டேட் வங்கி. இந்த வங்கி வரவு செலவு பட்டியலை பார்வையிட்டால் உங்களுடைய ஒய்வூதிய விபரம் பற்றி தெரிய வருமா என்றால் சரிதான். ஒய்வூதியம் மாதம் மாதம் எந்த தேதியில் வரவு வைக்கப்படும் என்றால் ஆரம்பத்தில் 30 ம் தேதி, தற்போது 27 முதல் 30 தேதிக்குள் வரவு வைக்கப்படுகிறது. நீங்கள் சொல்வது போல் **ரூ. 21,488/-** ஒய்வூதியமாக எந்த தேதியிலும் வரவு வைக்கப்பட்டதாக **பு.சா.ஆ.10** ல் இல்லை என்றால் சரிதான்.

3. DA வாக எவ்வளவு தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது என்ற விபரமும் **பு.சா.ஆ.10** ல் இல்லை என்றால் சரிதான். ஆனால் வங்கியில் கேட்டால் அதற்கான ஆவணங்களை கொடுப்பார்கள். அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயராக இருக்கிறீர்களா என்றால் ஆமாம். பணியில் இருந்து ஒய்வு பெற்ற பிறகு குறிப்பிட்ட தொகை எதுவும் வாங்கி வந்தாரா என்றால் ஆமாம். உங்களது கணவர் ஒய்வூதிய தொகையில் முன்பணமாக எந்த தொகையாவது வாங்கினாரா என்றால் **ரூ. 7,00,000/-** வாங்கி வந்தார். அவ்வாறு வாங்கி இருந்தால் மாதாந்திர ஒய்வூதியம் குறைவாகத்தான் வரும் என்றால் சரியல்ல. உங்களது வழக்கிற்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றாலும் எதிரிக்கு தாவா கடன் கொடுக்கும் அளவிற்கு உங்களுக்கு போதுமான வசதியோ வாய்ப்போ இல்லை என்றாலும் வசதியும் வாய்ப்பும் உள்ளது என்பதை நிருபிக்க ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை- இல்லை.**

Taken before me in open court, read over to the
witness and admitted by the deponent to be Correct.

Sd/-Thiru.K.Baskar
Judicial Magistrate,
Fast Track Court(Magisterial Level),
Kovilpatti.